அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 186

எனது இல. 2/9/750(எச்).
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
1981, சனவரி மாதம் 13 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

ஒழுக்காற்று விசாரணைகளை விரைவாக நடத்தி முடித்தல்

"அரசாங்க உத்தியோகத்தர்களின் நீடித்த இடைநிறுத்தம்" என்னும் விடயம் பற்றிய 1973, நவம்பர் மாதம் 09 ஆந் தேதியிடப்பட்ட 77ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையையும், "ஒழுக்காற்று விசாரணைகளை விரைவாக நடத்தி முடித்தல்" என்னும் விடயம் பற்றிய முறையே 1976-01-08ஆம், 1976-07-06ஆம், 1978-01-19ஆந் தேதிகளிடப்பட்ட 195 ஆம், 211 ஆம், 256 ஆம் இலக்கத் தாபனச் சுற்றறிக்கைகளையும் பார்க்க.

...

02. அத்தகைய அறிவுறுத்துரைகள் விடுக்கப் பெற்றிருந்தும் கூட, பல சந்தர்ப்பங்களில் குற்றப் பத்திரங்களைத் தயாரிப்பதையும் ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பிப்பதையும் அவற்றை முடிப்பதையும் அமைச்சுக்களும், திணைக்களங்களும் சுணக்கம் செய்துவந்துள்ளன. இது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு இரண்டகம் செய்வதாக விளங்குகின்ற அதே வேளையில், வேலையெதுவும் செய்யாமல் உத்தியோகத்தர்களுக்குத் தடையாணையிட்டு வைத்திருப்பதால் அரசாங்கம் அநாவசியச் செலவினத்துக்கும் உள்ளாக வேண்டியுள்ளது. குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் முறைப்பாட்டுக்குரிய விடயம் நீதிமன்ற விசாரணை நிலையிலிருக்கின்றதென்னும் தெளிவான உண்மை காரணமாகச் சுணக்கம் ஏற்படுகின்றது.

03. எனவே, கடமையிலிருந்து தடையாணையிடப் பெற்ற நிலையிலோ வேறு நிலையிலோவுள்ள ஓர் உத்தியோகத்தருக்கெதிரான நீதிமன்ற வழக்கு நடைபெறுகையிலேயே, நல்ல காரணத்திற்காக, எடுத்துக்காட்டாக, இயைபுள்ள ஆவணங்கள் எளிதிற் கிடைக்கக் கூடியதாக இன்மை போன்ற காரணத்திற்காக ஒழுக்காற்று அதிகாரி வேறு வகையாக முடிவு செய்தாலொழிய, உடனிகழ்வாக ஒழுக்காற்று விசாரணையையும் ஒழுக்காற்று அதிகாரி நடத்துதல் வேண்டும். விடயங்கள் பொலிசாருக்கோ இலஞ்ச ஆணையாளருக்கோ உரியனவாக்கப்பட்டிருக்கும் நேர்வுகளில், ஒழுக்காற்று அதிகாரி தேவைப்படும் ஆவணங்களின் ஒளிப்படப் படிகளைப் பெற்று, ஒழுக்காற்று நடவடிக்கைகளை முடித்தல் வேண்டும்.

04. தாபனக் கோவையின் (தொகுதி 11) XLV111 ஆம் அத்தியாயத்தின் 21.1 ஆம் பிரிவின் பிரகாரம்,

> குற்றச்சாட்டுக்கள் நிலை நாட்டப்பட்டால் உத்தியோகத்தரொருவரைப் பதவிநீக்கம் செய்ய வேண்டியளவுக்குப் பாரியதான குற்றச்சாட்டுக்களின் பேரில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது மேற்கொள்ளப்படவுள்ளதாக இருத்தல் வேண்டும்; அல்லது
>
> 19.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்ற ஒழுக்காற்று அதிகாரியினாற் குறித்த விடயம் ஆழ்ந்து ஆராய்வு செய்யப்பட்ட பின்னர், மேல்நிகழ்வாக உத்தியோகத்தரொருவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டியளவுக்குப் பாரியதான விடயம் ஒன்றில் 19.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு சட்ட நீதிமன்றத்திடமிருந்து அல்லது நியதிச்சட்ட அதிகார சபையிடமிருந்து ஓர் அறிக்கை கிடைக்கப் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது 18.1 ஆம் பிரிவின் பிரகாரம் தவறொன்று இழைக்கப்பட்டுள்ளமை வெளிவிடப்பட்டிருத்தல் வேண்டும்

என்னும் நிபந்தனைக்குட்பட்டு, உத்தியோகத்தரொருவர் தமது பதவிக்குரிய கடமைகளைத் தொடர்ந்து ஆற்றுதல் விரும்பத்தக்கதன்றெனக் கருதப்படுமிடத்து மட்டுமே கடமையிலிருந்து தடையாணையிடுதல் அவசியமாகின்றதுடன், ஒழுக்காற்று அதிகாரியினால் உடனே அவருக்கு கடமையிலிருந்து தடையாணையும் விதிக்கப்படலாம் என்பது கவனிக்கப்படல் வேண்டும்.

05. ஒழுக்காற்று அதிகாரிகள்-

(அ) கடமையிலிருந்து தடையாணையிடப்பட்டிருக்கும் ஓர் உத்தியோகத்தருக்கெதிரான குற்றப் பத்திரம் தடையாணையிட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் வழங்கப்படுகின்றதென்பதையும்,

(ஆ) அவசியமான போது, குற்றப் பத்திரத்துக்குப் பதில் கிடைத்த தேதியிலிருந்து இரண்டு கிழமைக் காலத்துக்குள், விசாரணை நியாயசபை நியமிக்கப்படுகின்றதென்பதையும்,

(இ) குறித்த நியாயசபை நியமிக்கப்பெற்ற தேதியிலிருந்து மூன்று மாத காலத்துக்குள் ஒழுக்காற்று விசாரணை முடிக்கப்படுகின்றதென்பதையும்

உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். மேற்படி காலஎல்லைகளுக்கு அமைந்தொழுகுவதைத் தடுப்பனவான நல்ல காரணமிருந்தாலொழிய, மேற்படி கால எல்லைகளுக்குக் கண்டிப்பாக அமைந்தொழுகுதல் வேண்டும்.

ஒப்பமிட்டவர்: டி. பி. ஜ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

கீசி/